සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடை.யது]
All Rights Reserved]

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - කොළඹ අධ්‍යාපන කලාපය
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம் - கொழும்பு கல்வி வலயம்
Western Provincial Education Department - Colombo Educational Zone

දෙවන වාර ඇගයීම - 2018
இரண்டாம் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation - 2018

| | | |
|---|---|---|
| 7 ශ්‍රේණිය<br>தரம் 7<br>Grade 7 | භූගෝල විද්‍යාව පත්‍ර I - II<br>புவியியல் பகுதி – I - II<br>Geography Paper I & II | පැය දෙකයි<br>இரு மணித்தியாலம்<br>Two Hours |

சுட்டெண் :.............................

# பகுதி - I

**எல்லா வினாக் களுக்கும் விடையளிக்குக.**

**இல 1-5 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. மனித வாழ்விற்கு பொருத்தமான வழி மற்றும நீர் கொண்ட கோள் எது?
   i. செவ்வாய். iii. புதன்
   ii. புவி iv. வியாழன்

2. கண்டமாகவும் தனி நாடாகவும் விளங்குவது.
   i. ஆபிரிக்கா iii. அவுஸ்திரேலியா
   ii. தென் அமெரிக்கா iv. ஐரோப்பா

3. இலங்கையின் மிக நீளமான பகுதியாக காணப்படும் பருத்தித்துறையிலிருந்து தேவேந்திரமுனை வரையிலான தூரம்
   i. 430 km iii. 402 km
   ii. 400km iv. 432 km

4. இலங்கைக்கு மேற்காவுகை மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் மாதம் வருமாறு
   i. மார்ச், ஏப்ரல், செப்டெம்பர். iii. அக்டோபர், நவெம்பர், டிசெம்பர்.
   ii. மே, ஜுன், ஜுலை. iv. நவெம்பர், டிசெம்பர், ஜனவரி

5. பௌதீக ரீதியாகப் பார்க்க முடியாது, ஆனால் மனித நடத்தையினால் வெளிப்படுத்தப்படுவன
   i. காணக்கூடிய மரபுரிமை. iii. மனிதன் உருவாக்கியமை
   ii. காண முடியாத மரபுரிமை. Iv. இயற்கையாக உருவானவை.

**வினா இலக்கம் 06 தொடக்கம் 10 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையை இடைவெளியில் எழுதுக.**

6. மாதிரிக் கோளத்தில் வடக்கிலிருந்து தெற்காகக் குத்தாக நீண்டு செல்லும் கோடுகள் ............................................ எனப் பெயர் பெறும்.
7. இலங்கை ........................................... வலயத்தில் அமைந்துள்ள நாடாகும்.
8. சர்வதேச திகதிக்கோடு அடையாளமிடப்பட்டுள்ளது.............................நெடுங்கோட்டை அடிப்படையாக கொண்டாகும்.
9. இலங்கையின் தலைநகரமான ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை........................... வலயத்தில் அமைந்துள்ளது.
10. புவியின் உட்பகுதியில் நிலவும் உயர் வெப்பம் மற்றும் அமுக்க வேறுபாடுகள் காரணமாகத் திடீரென நிகழும் புவியின் அசைவு................................. என அழைக்கப்படும்.

வினா இலக்கம் 11-15 கேள்விகளில் வழங்கப்பட்டிருக்கும் தகவல் சரியாயின் **(√)** எனவும், பிழையாயின் **(X)** எனவும் அடைப்புக்குள் இடுக.

11. புவி சூரியனை சுற்றிவர 365 நாட்கள் எடுக்கும் ( )
12. புவி கோள் வடிவானதாகக் கருதப்பட்ட போதும் அது முழுமையான கோள வடிவத்தினைக் கொண்டிருக்கவில்லை. ( )
13. இலங்கைத்தீவு இந்து சமுத்திரத்தில் தனி அமைவிடமாக அமைந்துள்ளது ( )
14. சர்வதேசக் கடல் சட்டத்திற்கமைய உலகின் அனைத்து கடற்கரையோரம் கொண்ட அரசுகளுக்கும் கடற்கரையோர எல்லையிலிருந்து 13கடல் மைல் எல்லை வரை ஆளுகை உரிமை வழங்கப்பட்டுள்ளது. ( )
15. தென்னாசிய நாடான இலங்கையின் எழுத்தறிவு வீதம 92% ஆகும். ( )

வினா இலக்கம் 16-20 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையினை அடைப்புக்குரியிலிருந்து தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.

16. அகலாங்குகளில் பிரதான கோடாக விளங்குவது............................ஆகும். (மத்திய கோடு/கடகக் கோடு / மகரக் கோடு)
17. நெட்டாங்குகளில் பிரதான நெட்டாங்காக விளங்குவது........................... ஆகும். (சர்வதேச திகதிக் கோடு/ஆட்டிக்/கிறீன்வீச்)
18. இலங்கை விட அகலக்கோடு.............................. அமைந்துள்ளது. (5-10)/ 4-6/ 5-7)
19. இலங்கையின் பிரதான நிலத்தோற்ற அம்சங்கள்............................... ஆகும் (இரண்டு / மூன்று /நான்கு)
20. இந்து சமுத்திரத்தின் அமைந்துள்ள இலங்கை தீவின் பரப்பளவு.......................சதுர கிலோமீற்றர்களாகும். (65610 / 65612/ 65100) (புள்ளி 2x20=40)

# பகுதி II

- முதலாம் வினா கட்டாயமானது
- முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. விடை எழுத வேண்டிய மொத்த வினாக்கள் ஐந்து ஆகும்.

(01) கீழ் காணப்படும் உலக வரைபடத்தில் காணப்படும் 1 தொடக்கம் 8 வரையிலான இலக்கங்களுக்குரிய இடங்களை / பெயர்களை உங்கள் விடைத்தாளில் எழுதுக. (புள்ளி 2 x 8 = 16)

Map world

(02) i. உலக மரபுரிமைகள் இரு வகைப்படும். அவை யாவை? (புள்ளி = 2)

ii. ஆதிவாசி சமூகம் வாழும் பிரதேசங்கள் இரண்டினையும் அவர்களது ஜீவோனோபாய முறைமைகள் இரண்டினையும் தருக ( புள்ளி = 4)

iii. ஆதிவாசிகள் நவீன மக்கள் சமூகத்துக்கு இசைவாக மாறும் சமூகமாக மாறியுள்ள விதங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (புள்ளி = 5)

03. 1. கீழ் காணப்படும் வரைபடம் மத்திய மலைநாடாகும். AB எழுத்துக்களில் குறிக்கப்பட்டுள்ள மேட்டுநிலங்கள் இரண்டினை முறையே குறிப்பிடுக. (புள்ளி = 2)

ii. மத்திய மலைநாட்டில் காணப்படும் நீர்வீழ்ச்சிகள் நான்கினைத் தருக (புள்ளி = 4)

iii. மத்திய மலைநாட்டு நிலத்தோற்றத்தின் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட மனித செயற்பாடுகள் மூன்றினைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினை விளக்குக. (புள்ளி =5)

04. i. இலங்கையின் உலர் வலய நிலத்தோற்றத்திற்குரிய பிரதேசங்கள் இரண்டிடைத் தருக. (புள்ளி = 2)

ii. இவ்வலயத்தில் காணக்கூடிய பௌதீக அம்சங்கள் 04 தருக. (புள்ளி 4)

iii. உலர் வலயத்தில் நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளும் விவசாய முறைமைகள் ஐந்தினை எழுதுக. (புள்ளி = 5)

05. i. இலங்கையின் யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கு அண்மையில் காணப்படும் தீவுகள் இரண்டினை எழுதுக. புள்ளி =2)

ii. மேற்கூறிய நிலத்தோற்றத்தில் காணப்படும் முக்கிய பண்புகள் இரண்டினையும் காலநிலை அம்சங்கள் இரண்டினையும் தருக. (புள்ளி 4)

iii. யாழ்குடாநாட்டில் வாழும் மக்கள் பனைமரத்தினால் பெறும் பயன்கள் மூன்றினை எழுதுக. அதில் ஒன்றினை விளக்குக. (புள்ளி 5)

6. i. கரையோர நிலத்தோற்றத்தில் முக்கிய அம்சங்கள் காணப்படுகின்றன. அவ்வாறான கடற்கரைகள் இரண்டினைத் தருக. (புள்ளி =2)

ii. கரையோர நிலத்தோற்றத்தில் காணப்படும் வளங்களை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும் கைத்தொழில்கள் இரண்டுத் தருக. (புள்ளி = 4)

iii. இந்நிலத்தோற்றத்தில் சுற்றுலா பயணிகளை கவருவதற்கு காரணமாய் உள்ள மனித செயற்பாடுகள் மூன்றினைக் குறிப்பிட்டு, அதில் ஒன்றினை விளக்குக. (புள்ளி 5)

7. i. இலங்கையில் இடம்பெறும் இடர்கள் பெறும்பாலும் மனித செயற்பாடுகளினால் இடம்பெறுபவையாகும். அவ்வாறான இடர்கள் இரண்டினைக் குறிப்பிடுக. ( புள்ளி 2)

ii. நீர் எழுதிய இடர்களில் ஒன்றினை தெரிவு செய்து, அவ்விடர் ஏற்படுவதற்கு காரணமாய் உள்ள காரணிகள் நான்கு தருக. (புள்ளி 4)

iii. மேற்கூறிய இடரில் (தெரிவு செய்து எழுதிய) மனிதனுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மூன்றினை எழுதி, அதில் ஒன்றை விளக்குக. (புள்ளி 5)